அது மாத்திரமல்ல, இந்த 5 சதவிகித வரியை இரத்து செய்யவேண்டும் என்பதையும், இன்சூரன்ஸ் பிரிமியம் தொகை மிக அதிகம் என்பதையும் எடுத்துக்காட்டுகின்ற வகையில், நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள், திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களானாலும், தமிழ் மாநிலக் காங்கிரஸ் உறுப்பினர்களானாலும் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சி போன்ற தோழமைக் கட்சிகளுடைய உறுப்பினர்களானாலும் தமிழகத்தின் சார்பிலே அங்கே அங்கம் வகிக்கின்ற அத்தனைபேரும் குரல் கொடுப்பார்கள் என்ற உறுதியையும் நான் லாரி உரிமையாளர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இவைகளையெல்லாம் இந்தப் பேச்சுவார்த்தையின்போது தெரிவிப்பேன் என்பதையும் கூறி, இதற்குப் பிறகாவது இந்த வேலை நிறுத்தத்தைக் கைவிட வேண்டுமென்று நான் அவர்களையெல்லாம் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், இது நாடு தழுவிய போராட்டமாக இருக்கின்றது. அவர்களுடைய சக்தி என்ன என்பதை நான்கு நாட்களாகக் காட்டிவிட்டார்கள். மேலும் சக்தியைக் காட்ட எண்ணி, நாட்டின் சக்தியை வீணாக ஆக்கிவிடக் கூடாது என்ற கோரிக்கையையும் இந்த அவையின் மூலமாக நான் அவர்களுக்கு வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன் என்று கூறி அமைகின்றேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

3. விதி 110-ன் கீழ் முதலமைச்சரின் அறிக்கை

முன்னாள் இந்தியப் பிரதமர் இராஜீவ் காந்தி கொலையுண்டபோது ஏற்படுத்தப்பட்ட சொத்துச் சேதங்களுக்கு இழப்பீடு வழங்க ஒரு நபர் ஆணையம் நியமனம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. திரு. இராஜீவ் காந்தி அவர்கள் கொலையுண்டபோது, ஏற்பட்ட சொத்துச் சேதங்கள் காரணமாக இழப்பீடு வழங்கியது குறித்து, பேரவை விதி 110-இன் கீழ் அறிக்கை ஒன்றைப் பேரவைக்கு அளிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி வேண்டியுள்ளார்கள். அனுமதி வழங்குகின்றேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991-ஆம் ஆண்டு, மே மாதம், 21-ஆம் நாள் முன்னாள் இந்தியப் பிரதமர், நாட்டின் இளந்தலைவர் இராஜீவ்காந்தி அவர்கள் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து, தமிழகத்தின் பல பகுதிகளிலே கலவரங்கள் ஏற்பட்டு, பொதுமக்கள் பலருடைய கோடிக்கணக்கான ரூபாய் சொத்துக்கள் நாசம் செய்யப்பட்டன.

முற்பகல் 11-25

அந்தக் கோடிக் கணக்கான ரூபாய் இழப்பைச் சரிக்கட்ட, பாதிக்கப்பட்டவர்களுக்கெல்லாம், அரசின் சார்பில் இழப்பீடு கொடுக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை, தமிழகமெங்கும் எழுந்த போதிலும் அந்தக் கொலைக்குப் பிறகு, தமிழகத்தில் நடைபெற்ற கடந்தகால ஆட்சியில், அந்தக் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை; அலட்சியப்படுத்தப்பட்டன. எனவே, அந்தக் கலவரங்களிலே பாதிக்கப்பட்டவர்களுக்கு, அரசு இழப்பீடு வழங்க ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கோரி, திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் என்ற முறையில், பேராசிரியர் அவர்கள், சென்னை, உயர்நீதிமன்றத்தில், 1991-ஆம் ஆண்டு, 'ரிட் மனு' ஒன்றினை, 'பெட்டிஷன்' எண் 7940/91 தாக்கல் செய்தார். அந்த 'ரிட் பெட்டிஷ'னில், விசாரணைக் கமிஷன் ஒன்றை அமைத்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு, நிவாரணத் தொகை வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்ற கோரிக்கை வைக்கப்பட்டது. ஆனால், அன்றிருந்த அரசு, நீதிமன்றத்திலே தாக்கல் செய்த பதிலில், அந்தக் கோரிக்கையை ஏற்க முன்வராத போதிலும், சென்னை, உயர்நீதிமன்றம் தி.மு.கழகத்தின் சார்பில் போடப்பட்ட வழக்கை ஏற்று, முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரி திரு. கே.ஜே.எம். ஷெட்டி அவர்களைச் சிறப்பு ஆணையாளராக நியமித்து, பாதிக்கப்பட்டவர்களின் கோரிக்கைகளையெல்லாம் பரிசீலித்து, நிவாரணத் தொகை குறித்து பரிந்துரை செய்ய வேண்டுமென்று ஆணையிட்டது.

தமிழகத்தில், அ.தி.மு.க. ஆட்சி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில், சிறப்பு ஆணையாளர் திரு. கே.ஜே.எம். ஷெட்டி அவர்கள், தமிழகத்தில் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்த முறையீடுகளை விசாரித்து, பரிந்துரை செய்த இழப்பீடு, அவர்களுக்கு ஏற்பட்ட நாசத்தின் அளவோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, மிக மிகக் குறைவாக இருந்த காரணத்தினால், பாதிக்கப்பட்ட பலர், அந்த இழப்பீட்டுத் தொகையை ஏற்றுக்கொள்ள மறுத்து, நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். மேலும், திரு. கே.ஜே.எம். ஷெட்டி அவர்கள், பாதிக்கப்பட்டவர்கள் பலருக்கு எவ்வித இழப்பீட்டுத் தொகையையும் பரிந்துரைக்காமல் விட்டுவிட்டார். அவர்களும் நீதிமன்றத்திலே முறையிட்டுக் கொண்டார்கள். இந்த மனுக்கள் எல்லாம் நீதிமன்றத்தால் ஏற்கப்பட்டு, அரசின் பதிலை, நீதிமன்றம் அந்த மனுக்களின் மீது கோரியது. கடந்தகால அரசாங்கம், அதற்கு அப்போது கொடுத்த

பதிலில், அந்தக் கோரிக்கை மனுக்களை நிராகரிக்குமாறு தெரிவித்தது. நீதிமன்றத்திலே, அந்த வழக்கு தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே, தமிழகத்திலே ஆட்சிமாற்றம் ஏற்பட்டு தான், இந்தப் பிரச்சினையிலே பாதிக்கப்பட்டவர்களுடைய முறையீடுகளை மனதிலே கொண்டு, அமைச்சரவையில், 11-2-1997 அன்று விவாதித்து, ஏற்கெனவே நீதிமன்றத்திலே நிலுவையிலே உள்ள வழக்குகளில், முந்தைய அரசால் தாக்கல் செய்யப்பட்டிருந்த எதிர் மனுக்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டு, புதிதாகப் பதில் மனு, இந்த அரசின் சார்பில் தாக்கல் செய்வது என்று முடிவு எடுக்கப்பட்டது.

அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த முடிவை, அரசு வழக்கறிஞர் சென்னை உயர்நீதிமன்றத்தின்முன் தெரிவித்ததன் அடிப்படையில் சென்னை உயர்நீதிமன்றம், தனது 27-3-'97 நாளிட்ட ஆணையில், அரசின் கருத்துரையை ஏற்றுள்ளது. அதற்கேற்ப, வழங்கிய நிவாரணத் தொகை போதாது என்று எதிர்த்து 'ரிட் பெட்டிஷன்' தொடர்ந்தது உட்பட, பாதிக்கப்பட்டவர்கள் நிவாரணத் தொகை பெறும்போது, எதிர்ப்புத் தெரிவித்து நிவாரணத் தொகையைப் பெற்றுக் கொண்டவர்களின் கோரிக்கைகளையும் பரிசீலித்து, நிவாரணம் வழங்கிட, உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி திரு. எஸ். மோகன் அவர்களை, ஒரு நபர் கமிஷனாக நியமித்து, அரசு ஆணை பிறப்பிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

4. தகவல் கோரல்

மழைக் காரணமாக சட்டமன்ற நூலகம் பாதிப்பு

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே கேள்வி கேட்கக்கூடாது.

திரு. ஜி. பழனிசாமி: நான் வேறு விஷயமாகக் கேட்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ்நாடு சட்டமன்றத்தினுடைய நூலகம் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நூலகம். நேற்று பெய்த மழையின் காரணமாக, பல நூல்கள் மழையிலே நனைந்து, இன்றைக்கு வீணாகக்கூடிய ஒரு நிலையிலே இருக்கின்றன. பெருமளவுக்கு நனைந்து, வீணாகியிருக்கின்றன. அதேபோல், சட்டமன்ற வளாகத்திலே இருக்கக்கூடிய 'டிரெய்னேஜ்'கூட தண்ணீர் நிரம்பி வழிந்து, காலையிலே பார்த்தோமானால், சட்டமன்றத்திற்குள்ளேயே அந்தத்